அரசியல் கட்சியாக அங்கீகாரம் பெறாத த.வெ.க. குறித்து பேசி என்ன பயன்?

அமைச்சர் ஐ.பெரியசாமி பேட்டி!

சென்னை, டிச.7

தவெக அரசியல் கட்சியாக அங்கீகாரம் பெற்றால் மட்டுமே கருத்து கூற முடியும். எனவே பேசி என்ன பயன் இருக்கிறது? என அமைச்சர் ஐ.பெரியசாமி கூறினார்.

திண்டுக்கல்லில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

"திருப்பரங்குன்றம் விவகாரம் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. நல்ல தீர்ப்பு வரும் என்று எதிர்பார்க்கிறோம். தவெக இன்னும் அரசியல் கட்சியாக அங்கீகாரமே பெறவில்லை. அரசியல் கட்சியாக இருந்தால் நிச்சயம் கருத்து கூறுவார்கள். கருத்து கூற வில்லை என்றால், அது பற்றி பேசி என்ன பயன். நாஞ்சில் சம்பத் தவெகவில் சேர்ந்தது குறித்து அதிமுகவிடம் தான் கேட்க வேண்டும். கட்சி மாறுவதை பற்றி நான் பேசுவது இல்லை, அதைப் பற்றி எனக்குத் தெரியாது.

ஒரே கட்சியில் நான் இருக்கிறேன் அதுதான் எனக்குத் தெரியும். எஸ்.ஐ.ஆர், ஒரே இரவில் என்னுடைய தொகுதியில் இடம் பெயர்ந்துவிட்டார்கள் என 6000 நபர்களும், இறந்தவர்கள் என்று 16,000 பேரும் என மொத்தம் 22 ஆயிரம் பேரை நீக்கிவிட்டார்கள். பழக்கனூத்து, நடுப்பட்டி, நீலமலைக் கோட்டை இன்னும் பல இடங்களில் இறந்தவர்கள் பட்டியலில் சேர்த்து உள்ளார்கள். குறிப்பாக திண்டுக்கல்லில் உள்ள முருகானந்தம் என்ற திமுக பிரமுகரை இறந்தோர் பட்டியில் பெயர் சேர்த்து உள்ளார்கள். திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் உடனே சேர்க்கிறேன் என்று சொன்னார். அதில், எனக்கு நம்பிக்கை இல்லை. என்ன நடக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. மாவட்ட ஆட்சியர்தான் விளக்கம் சொல்ல வேண்டும்.

திண்டுக்கல்லில் பிஎல் ஒக்கள் வாக்காளர்களை சேர்ப்பதற்கு களத்திற்குச் செல்லவில்லை, அறையிலேயே அமர்ந்து பெயர்களை நீக்கி விட்டார்கள். இது குறித்து தேர்தல் ஆணையத்திற்கு புகார் அனுப்பி உள்ளேன். எஸ்.ஐ.ஆர் முழுமையாக நடைபெறவில்லை. ஆகவே, இந்த எஸ்.ஐ.ஆரை ஒன்றிய அரசு உடனடியாக ரத்து செய்ய வேண்டும். நாங்கள் அதைத்தான் சொல்கிறோம். எஸ்.ஐ.ஆர் யை ரத்து செய்யுங்கள் தேர் தலை நடத்துங்கள் வாக்காளர்கள் வந்து வாக்களிக் கட்டும் இல்லையெனில் வாக்களிக்காமல் கூட போகட்டும். ஆனால், எஸ்.ஐ.ஆரை ரத்து செய்ய வேண்டும் அதுதான் என்னுடைய கருத்து. உச்ச நீதிமன்றம்திருப்பரங்குன்றம் விவகாரத்தில் மேல்முறையீடு செய்வது அடிப்படை உரிமை. ஒரு நீதிமன்றம் கொடுத்த உத்தரவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. இதற்கு சட்டமே வழி வகுத்து உள்ளது. உங்களுடைய உரிமையைப் பெறுவதற்கு உச்ச நீதிமன்றம் வரை செல்லலாம் எனக் கூறியுள்ளது. அதனால் தான் நாங்கள் சென்று உள்ளோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மாஞ்சோலை பூத் எஸ்.ஐ.ஆர். படிவம் சம்மந்தமான குறைபாடுகளை வட்டாட்சியர் அலுவலகத்தில் சார் ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர்களுடன் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன் , ஒன்றிய செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர் பரணி ஆர்.சேகர் கலந்துரையாடல் நடத்தினர்.

விக்கிரமசிங்கபுரம் சேனைத்தலைவர் மேல் நிலைப்பள்ளியில், நகராட்சி தலைவர் செல்வ சுரேஷ் பெருமாள் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

போதை பொருள் வழக்குகள்:

நைஜீரியா, கேமரூன், சூடானை சேர்ந்த 28 பேர் கைது!

சென்னை போலீசார் நடவடிக்கை!!

சென்னை,டிச.7–

சென்னையில் போதை பொருள் வழக்கில், இதுவரை நைஜீரியா, கேமரூன், சூடான் நாடுகளை சேர்ந்த 28 பேரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

போதைப்பொருள்தடுப்பு நுண்ணறிவுபிரிவு போலீஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், கடந்த செப்.18ம் தேதி போரூர் டோல்கேட் சர்வீஸ் சாலையில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அங்கு போதைப் பொருள் வைத்திருந்த சரண்ராஜ், ரெக்ஜின் மோன், ஜமூனா குமார் ஆகிய மூன்று பேரை போலீஸார் கைது செய்து அவர்களிடம் இருந்து மெத்தம்பெட்டமைன், கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களை பறிமுதல் செய்தனர்.

அவர்களிடம் நடத்திய விசாரணையில் கிடைத்ததகவலின் பேரில், இவ்வழக்கில்தலைமறைவாகஇருந்துவந்த பவன்குமார், ஹாசிக் பாஷா, ஆறுமுகம், பிரபாகரன் உள்ளிட்ட 4 பேரை செப்.21ம் தேதி போலீஸார் கைது செய்து, போதைப் பொருட்களை பறிமுதல் செய்தனர். தொடர்ந்து, கோவூர் பகுதியை சேர்ந்த மணிகண்டன் என்பவரை கடந்தமாதம் 4ம் தேதி போலீஸார் கைது செய்தனர். இந்நிலையில், கைது செய்யப்பட்டவர்களிடம் போலீஸார் நடத்திய விசாரணையில், இவர்களுக்கு போதைப் பொருட்களை சப்ளை செய்து வந்த சூடான் நாட்டை சேர்ந்த மொஹந்த் மோவியா அப்துல் ரஹ்மான் அல்டூராப்ஸ் (24), நைஜீரியாவை சேர்ந்த நாஜி லோடச் சுக்வு (27) ஆகிய இருவரையும் பெங்களூரில் போலீஸார் நேற்று கைது செய்தனர். இவர்களிடம் இருந்து, ரூ.1.41 லட்சம் பணத்தையும் பறிமுதல் செய்து, இருவரையும் சிறையில் அடைத்தனர்.

சென்னையில் இதுவரை போதை பொருள் வழக்கில், நைஜீரியா நாட்டை சேர்ந்த 26 பேரும், கேமரூன் நாட்டை சேர்ந்த ஒருவரும், சூடான் நாட்டை சேர்ந்த ஒருவரும் என 28 வெளிநாட்டவரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

அமெரிக்காவின்

அலாஸ்காவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்!

ரிக்டர் அளவில் 7 ஆக பதிவு!!

அலாஸ்கான்,டிச.7–

அலாஸ்காவின் ஜூனாவ் வில் இருந்து வடமேற்கே சுமார் 370 கிலோமீட்டர் தொலைவிலும், கனடாவின் யூகோனின் வைட் ஹார்சுக்கு மேற்கே 250 கிலோ மீட்டர் தொலைவிலும் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது ரிக்டர் அளவில் 7 ஆக பதிவானது. 10 கி.மீ ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது. இந்த நிலநடுக்கம் அலாஸ்கா வின் யாகுடாட், ஜூனாவ் ஆகிய இடங்களில் உணரப்பட்டது.

சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் வீடுகள் பயங்கரமாக குலுங்கின. இதனால் மக்கள் வீடுகளில் இருந்து வெளியேறி சாலைகளில் தஞ்சம் அடைந்தனர். பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டபோதிலும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை.

சுனாமி அச்சுறுத்தல் இல்லை என்று பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்தது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து உடனடியாக தகவல் வெளியாகவில்லை.

வங்கதேச முன்னாள் பிரதமர்

ஷேக் ஹசீனா விரும்பும் வரை இந்தியாவில் தங்கியிருக்கலாம்!

வெளியுறவுத்துறை அமைச்சர் விளக்கம்!!

புதுடெல்லி, டிச. 07

வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா இந்தியாவுக்கு வந்துள்ளதும், இங்கு தங்கியிருப்பதும் அவரது தனிப்பட்ட முடிவு. அவர் விரும்பும் வரை இந்தியாவில் தங்கியிருக்கலாம் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

நம் அண்டை நாடான வங்கதேசத்தில், கடந்தாண்டு ஆகஸ்டில் அரசுக்கு எதிராக நடந்த இளைஞர் போராட்டத்தால், ஷேக் ஹசீனா பிரதமர் பதவியை இழந்தார். மேலும், நாட்டை விட்டு வெளியேறிய அவர் இந்தியாவில் தஞ்சமடைந்தார். மாணவர்களை கொடூரமாக அடக்க முயன்றதாக ஷேக் ஹசீனா மீது அந்த நாட்டு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. மேலும், ஷேக் ஹசீனா மீது தொடரப்பட்ட மூன்று ஊழல் வழக்குகளுக்காக, 21 ஆண்டுகள் சிறை தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. அவரை நாடுகடத்துமாறு இந்தியாவிடம் வங்கதேசம் கோரிக்கை விடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கூறியதாவது:–

வங்க தேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா இந்தியாவில் தங்குவது, அவரது தனிப்பட்ட முடிவு. அவர் இந்தியாவில் விரும்பும் வரை தங்கலாம். வங்கதேசத்துடன் நிலையான உறவுகளை எதிர்பார்க்கிறோம். அவர் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் இங்கு வந்தார். இந்தியாவில் இருந்து திரும்பி செல்வது குறித்து அவர்தான் முடிவு செய்ய வேண்டும்.

வங்கதேசத்துடனான உறவை இந்தியா மதிக்கிறது. வங்கதேசத்தில் முன்பு தேர்தல்கள் எவ்வாறு நடத்தப்பட்டன என்பது குறித்து நாங்கள் கேள்விப்பட்டோம். இப்போதைய பிரச்சினை நியாயமான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே.

இவ்வாறு எஸ். ஜெய்சங்கர் கூறினார்.

அமெரிக்க விவகாரம் குறித்தும் ஜெய்சங்கர் கருத்து தெரிவித்துள்ளார்.

ரஷ்ய அதிபர் புதினின் இந்தியப் பயணம் இந்தியா–அமெரிக்கா இடையிலான இருதரப்பு வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தையை எவ்வகையிலும் பாதிக்காது. இந்தியா பன்முக உறவைப் பேணும் நாடு.

பல்வேறு நாடுகளுடன் நல்லுறவைத் தொடர்வது முக்கிய அம்சமாகும். கூட்டுறவுக்கான நாடுகளை தேர்வு செய்யும் சுதந்திரம் இந்தியாவுக்கு உள்ளது. மற்ற நாடுகளுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என இந்தியாவுக்கு எந்த நாடும் பாடம் எடுக்க வேண்டியதில்லை. இந்தியா சுயமாகவே முடிவெடுக்கிறது.

அமெரிக்காவுடனான இருதரப்பு வர்த்தகபேச்சுவார்த்தையில் இந்தியத் தொழிலாளர்கள், விவசாயிகள், குறு மற்றும் சிறு வர்த்தகர்களின்நலனுக்கு இந்தியா முக்கியத்துவம் அளிக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்தியப் பொருட்களுக்கு அமெரிக்கா 50 சதவீதம் வரி விதித்துள்ளது. இரு தரப்பு வர்த்தக ஒப்பந்தம் மற்றும் வரி குறைப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்க வர்த்தக துணைப் பிரதிநிதி ரிக் சுவிட்சர் தலைமையிலான குழு இம்மாதம் 10–ஆம் தேதி டெல்லிக்கு வருகிறது.

இந்தியக் குழுவுக்கு இணை செயலாளர் தர்பன் ஜெயின் தலைமை தாங்குகிறார்.

இரு தரப்பினரும் 12–ஆம் தேதி வரை பேச்சுவார்த்தை நடத்துகின்றனர்.

பேச்சுவார்த்தையின் வாயிலாக விரும்பத்தக்க விளைவு ஏற்படும் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரும், வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயலும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

ஜூன் 11முதல் ஜூலை 19 வரை

2026 உலகக் கோப்பை கால்பந்து திருவிழா!

போட்டி அட்டவணை வெளியீடு!!

புதுடெல்லி, டிச.7

2026 உலகக் கோப்பை கால்பந்து போட்டி அடுத்த ஆண்டு ஜூன் 11ந்தேதி தொடங்கி ஜூலை 19ந்தேதி வரை கனடா, மெக்சிகோ, அமெரிக்கா ஆகிய 3 நாடுகளில் நடைபெறுகிறது. முதல் முறையாக 48 நாடுகள் பங்கேற்கும் இந்தத் தொடரில், போட்டியை நடத்தும் 3 நாடுகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன.

ஏற்கெனவே நேரடி தகுதி மற்றும் தகுதி சுற்று மூலம் 42 அணிகள் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், மீதமுள்ள 6 அணிகள் அடுத்தாண்டு மார்ச் இறுதிக்குள் தேர்வாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டி அட்டவணைப்படி, 48 அணிகள் 12 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் 4 அணிகள் இடம்பெறுகின்றன. லீக் சுற்று முடிவில், ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் மற்றும் மூன்றாம் இடம் பெறும் சிறந்த 8 அணிகள் சேர்த்து மொத்தம் 32 அணிகள் நாக்அவுட் சுற்றுக்கு முன்னேறும். பிரேசில், ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, போர்ச்சுகல், ஸ்பெயின் உள்ளிட்ட முன்னணி அணிகள் வெவ்வேறு பிரிவுகளில் இடம் பெற்றுள்ளதால், லீக் சுற்றே கடும் போட்டியாக இருக்கும் என கால்பந்து ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர். ஜூன் 11ந்தேதி நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் 'ஏ' பிரிவு அணிகளான மெக்சிகோ–தென் ஆப்பிரிக்கா, தென் கொரியா–தகுதி சுற்று அணி மோதுகின்றன. நடப்புசாம்பியன் அர்ஜென்டினா தனது முதல் ஆட்டத்தில் அல்ஜீரியாவை சந்திக்கிறது. மொத்தம் 104 ஆட்டங்கள் 3 நாடுகளில் உள்ள 16 நகரங்களில் நடைபெறும் இந்த உலகக் கோப்பை தொடரின் லீக் போட்டிகள் ஜூன் 27ம் தேதியுடன் நிறைவடைகின்றன. அதன் பின் நாக்அவுட் சுற்று தொடங்கி, ஜூலை 19ம் தேதி நியூஜெர்சியில் இறுதிப் போட்டி நடைபெறுகிறது.

அம்பாசமுத்திரம் ஒன்றியம் வாகைகுளம் ஊராட்சியில், பேச்சியம்மன் கோவில் தெருவில் உள்ள, டாக்டர் அம்பேத்கர் நினைவு நாளில் ஒன்றிய கவுன்சிலர் ஆகாஷ் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

கிர்கிஸ்தானில்

அடிமைகளாக தவிக்கும் 12 இந்தியர்கள்!

உ.பி.மாநிலத்தை சேர்ந்தவர்கள்!!

லக்னோ,டிச.7

கிர்கிஸ்தானில் உ.பி. மாநிலத்தை சேர்ந்த 12 இந்தியர்கள் அடிமைகளாக தவிக்கின்றனர்.

உத்தர பிரதேசத்தின் பிலிபித் பகுதியை சேர்ந்த 12பேர், சிலமாதங்களுக்கு முன்பு வேலைக்காக கிர்கிஸ்தான் நாட்டுக்கு சென்றனர்.

அங்கு சென்ற பிறகு திறந்தவெளியில் தங்கவைக் கப்பட்டுள்ளனர். அதோடு 3 வேளை யும் போதுமான உணவு வகைகளும் வழங்கவில்லை. இதனால் இந்தியாவுக்கு திருப்பி அனுப்ப கோரிக்கை விடுத்தனர். ஆத் திரமடைந்த கிர்கிஸ்தான் ஒப்பந்ததாரர்கள், இந்திய தொழிலாளர்களை அடித்து உதைத்து அவர்களின் பாஸ்போர்ட்டை பறித்து வைத்து கொண்டனர்.

இது தொடர்பாக சமூக வலைதளம் மூலமாக உத்தரபிரதேசத்தில் உள்ளஉறவினர்களுக்கு இந்திய தொழிலாளர்கள் வீடியோ அனுப்பினர். புகாரின் அடிப்படையில் மத்திய வெளியுறவு அமைச்சகம் இந்திய தொழிலாளர்களை விரைவில் மீட்கும் என்று உத்தர பிரதேச அரசு அதிகாரிகள் உறுதி அளித்துள்ளனர்.

கேரள மாநிலத்தில்

எஸ்.ஐ.ஆர். படிவம் சமர்ப்பிக்க ஒருவாரம் நீட்டிப்பு!

18–ந் தேதி கடைசி நாள்!!

திருவனந்தபுரம்,டிச.7–

கேரளா மாநிலத்தில் எஸ்.ஐ.ஆர். படிவம் சமர்ப்பிக்க மேலும் 1 வாரம் நீட்டிக்கப்பட்டுள்ளது. 18–ந் தேதி கடைசி நாள் ஆகும்.

தமிழகம், கேரளா உள்ளிட்ட 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (எஸ்ஐஆர்) மேற்கொள்ளப்படுகின்றன. எஸ்ஐஆர் படிவம் சமர்ப்பிக்க டிசம்பர் 4ம் தேதி கடைசி நாளாகும். எனினும் தேர்தல் ஆணைம் இதனை 11ம் தேதி வரை ஒரு வாரம் நீட்டித்தது.

இந்நிலையில் கேரளாவில் உள்ளாட்சித் தேர்தல் காரணமாக எஸ்ஐஆர் பணியை ஒத்திவைக்க வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் கேரள அரசு முறையிட்டது.

கேரள அரசின் கோரிக்கை ஏற்று எஸ்ஐஆர் அட்டவணையை தேர்தல் ஆணையம் 1 வாரம் நீட்டித்துள்ளது. இதன்படி, கேரளாவில் டிசம்பர் 18ம் தேதி வரை வாக்காளர்கள் எஸ்ஐஆர் படிவங்களை சமர்ப்பிக்கலாம்.

ஒற்றுமை இல்லாததால் தோல்வி:

அவசர சிகிச்சை பிரிவில் இண்டியா கூட்டணி உள்ளது!

உமர் அப்துல்லா கருத்து!!

புதுடெல்லி,டிச.7–

இண்டியா கூட்டணி அவசர சிகிச்சை பிரிவில் உள்ளது ஒற்றுமை இல்லாததால் தோல்வி வருகிறது என காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகம் சார்பில் தலைமைத்துவம் தொடர்பான உச்சி மாநாடு நடைபெற்றது. இதில் காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா பேசியதாவது:

தேர்தலின்போது பாஜக வாக்கு திருட்டில் ஈடுபடுவதாகவும் மின்னணு வாக்கு இயந்திரங்களில் முறைகேடுசெய்துவெற்றி பெறுவதாகவும் சிலர் குற்றம் சாட்டுகின்றனர். இதில் எனக்கு உடன்பாடு இல்லை.

நாடு முழுவதும் நடைபெறும் தேர்தல்களில், தங்கள் வாழ்க்கையே இதில் தான் உள்ளது என்று கருதி பாஜகவினர் தீவிரமாக பணியாற்றுகின்றனர். அதனால்தான் அவர்களால் வெற்றி பெற முடிகிறது. பிரதமரும், அவரது சகாக்களும் தேர்தலுக்காக 24/7 உழைப்பது போல எதிர்க்கட்சித் தலைவர்கள் உழைப்பது இல்லை.

இண்டியா கூட்டணிக் கட்சிகளுக்கிடையே ஒற்றுமை இல்லை.

இக்கூட்டணி இப்போது அவசர சிகிச்சை பிரிவில் உள்ளது. அதற்கு செயற்கை சுவாசம் பொருத்தப்பட்டுள்ளது. பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியை எதிர்கொள்ள இண்டியா கூட்டணி கட்சிகள் ஒருங்கிணைந்து முடிவுகளை எடுக்க வேண்டும்.

இவ்வாறு முதல்வர் உமர் அப்துல்லா தெரிவித்தார்.

சங்கரன்கோவில் அருகே

தனியார் பேப்பர் ஆலை எந்திரத்தில் சிக்கி தொழிலாளி பலி!

போலீசார் விசாரணை!!

நெல்லை, டிச.7

சங்கரன்கோவில் அருகே தனியார் பேப்பர் ஆலை எந்திரத்தில் சிக்கிய தொழிலாளி பலத்த காயமடைந்தார்.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலை அடுத்த சின்னக்கோவிலாங்குளம் அருகே உள்ள தர்மத்தூரணி கிராமத்தை சேர்ந்தவர் தங்கராஜ் மகன் சுப்பிரமணியன் (45). இவர் அங்குள்ள ஈச்சந்தா பகுதியில் உள்ள ஒரு தனியார் பேப்பர் ஆலையில் தொழிலாளியாக வேலை பார்த்து வருகிறார். இந்த நிலையில் நேற்று சுப்பிரமணியன் வழக்கம்போல் ஆலையில் வேலை செய்து கொண்டிருந்தார். அப்போது எதிர்பாராதவிதமாக அவர் எந்திரத்திற்குள் சிக்கிக்கொண்டார். இதனால் அலறி துடித்த அவரை உடன் பணிபுரிந்த தொழிலாளர்கள் மீட்டனர். ஆனால் அதற்குள் சுப்பிரமணியன் பலத்த காயம் அடைந்தார். இதில் உயிருக்கு போராடிய அவரை சிகிச்சைக்காக நெல்லை புதிய பஸ் நிலையம் அருகே உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் குறித்து சின்னக்கோவிலாங்குளம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

'வாரணாசி' பட டிஜிட்டல் உரிமை ரூ.1000 கோடிக்கு விற்பனை!

சென்னை,டிச.7–

ராஜமவுலி இயக்கத்தில் மகேஷ்பாபு, பிரியங்கா சோப்ரா, பிருத்விராஜ் உள்பட பலர் நடிக்கும் படம், 'வாரணாசி'. ஆக்ஷன் அட்வெஞ்சர் பேன்டஸி படமான இது, 2027ம் ஆண்டு வெளியாக இருக்கிறது. இந்நிலையில் இதன் டிஜிட்டல் உரிமையை வாங்க போட்டி நடப்பதாகக் கூறப்படுகிறது.

ராஜமவுலியின் 'பாகுபலி 2' வெளிநாடுகளிலும் வரவேற்பைப் பெற்றது. அவர் இயக்கிய 'ஆர்ஆர்ஆர்' படத்தின் பாடலுக்கு ஆஸ்கர் விருது கிடைத்ததை அடுத்து 'வாரணாசி' படத்துக்குச் சர்வதேச அளவில் எதிர்பார்ப்பு உள்ளது. இதனால் பல முன்னணி ஓடிடி தளங்கள் இப்படத்தின் டிஜிட்டல் உரிமையை வாங்க முயன்று வருகின்றன.

ஒரு ஹாலிவுட் படத்துக்கான டிஜிட்டல் உரிமைத் தொகையை கொடுக்க, சிலதளங்கள் முன்வந்துள்ளதாகவும் இதன் டிஜிட்டல் உரிமை ரூ.1000 கோடிக்கு விற்கப்பட இருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இது முடிவானால், ஓர் இந்தியப் படத்தின் சாதனை டிஜிட்டல் விற்பனையாக இது இருக்கும் என்கிறார்கள்.

VTM விமிடெட்
பதிவு அலுவலகம்: சூலக்கரை, விருதுநகர்.
CIN : L17111TN1946PLC003270
இணையதளம் : www.vtmill.com தொலைபேசி : 0452-2482595

அறிவிப்பு

செபி (SEBI) நிபந்தனைகள் 2015ம் (பட்டியலிடும் தேவைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) நிபந்தனைகள் 29 மற்றும் 47 க்கு இணங்க இக்கம்பெனியின் இயக்குநர்கள் கூட்டம் 15.12.2025 திங்கட்கிழமை பிற்பகல் 12 மணிக்கு காணொளி வாயிலாக நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இதில் இயக்குநர்கள் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரியாக திரு. பி. செந்தில் குமார் நியமனம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. இந்த அறிவிப்பு, பங்கு வர்த்தக நிறுவனத்தின் இணையதளம் www.bseindia.com இல் உள்ளது.

இடம்: சூலக்கரை, விருதுநகர்.
நாள்: 5.12.2025

VTM விமிடெட்டிற்காக,
கா.பிரியதர்ஷினி
கம்பெனி செயலாளர்